இலங்கை மின்சார சபை ஊழியர் சேமலாப நிதியம் - 2025

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபை ஊழியர் சேமலாப நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 23(iii) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தவிர, 2025 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகவுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியம் தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது

முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- நிதியம் தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும்

- நிதியத்தின் வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்குடன் இணங்காமை (LKAS/SLFRS)

உரிய கணக்கீட்டு நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
(அ) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்பான எண்ணக்கருவுக்கு முரணாக, மீளாய்வாண்டிற்கான சேமலாப நிதியத்திற்கு நேரடியாகப் பொறுப்பாக்கப்படவேண்டிய ரூபா 66.55 மில்லியன் செயற்பாட்டுச் செலவினங்கள் இனங்காணப்படவில்லை என்பதுடன், அந்நிதியத்தினால் பயன்படுத்தப்பட்ட ரூபா 7.22 மில்லியன்	2003 திசெம்பர் 31 ஆம் திகதிய 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சேமலாப நிதிய விதிகளின் 20 (i) ஆம் இலக்க விதியின் பிரகாரம், அனைத்து நிர்வாகச் செலவுகளும் இலங்கை மின்சார சபையினால் பொறுப்பேற்கப்பட்டு, இலங்கை மின்சார சபையின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. எனவே, வர்த்தமானி விதிகளில் விதிக்கப்பட்டுள்ளவாறு	உரிய கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக, பொறுப்பாக்கப்படவேண்டிய அனைத்துச் சொத்துகள் மற்றும் செலவினங்களும் இனங்காட்டப்படுதல் வேண்டும்.

	பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் இனங்காட்டப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	இந்நிதியத்தின் பாதுகாவலராகச் செயற்படும் இலங்கை மின்சார சபையானது அனைத்து நிர்வாகச் செலவுகளையும் பொறுப்பேற்கின்றது.	
(ஆ)	மத்திய வைப்பக அமைப்பில் நிதியத்தின் பெயரில் முதலீடுகள் வைத்திருக்கப்படாததால், திரட்டத் தவறிய வட்டி உட்பட எண்ட்ரஸ்ட் செக்யூரிட்டீஸ் பீஎல்சியில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,772.76 மில்லியன் முதலீட்டை மீளப்பெறுவது ஐயத்திற்குரியதாக உள்ளது. இந்நடவடிக்கை நிதிக்கூற்றுகளின் குறிப்பு 11.2 இல் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிக் கருவிகள் தொடர்பான இலங்கை கணக்கீட்டுத் நியமம் 09 இன் 5.5 ஆம் பிரிவின் பிரகாரம் முழுமையான பெறுமதி குறைப்பு நட்டத்தையும் அங்கீகரிப்பதற்குப் பதிலாக, ரூபா 615.28 மில்லியன் தொகையானது பெறுமதி குறைப்பு ஏற்பாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய ரூபா 2,157.48 மில்லியன் தொகையானது முதலீட்டு இருப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	எண்ட்ரஸ்ட் செக்யூரிட்டீஸ் பீஎல்சியிடமிருந்து பெறவேண்டிய வட்டித் தொகைகளுக்காக நிதிக்கூற்றில் ரூபா 615.28 மில்லியன் பெறுமதி குறைப்பு ஏற்பாட்டாகப் பதிவிடப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் தொடர்வதனால், குறித்த முதலீட்டின் மீது ஏற்படக்கூடிய சாத்தியமான பெறுமதி குறைப்பு நட்டங்களுக்கு பதிலீடாக, நிதியத்தின் வருடாந்த வருமானக் கூற்றினூடாக முதலீட்டு இருப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 2025 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதியில், இவ் இருப்புத் தொகையானது ரூபா 2,157,482,999.33 ஆகக் காணப்படுகின்றது.	நிதியமானது SLFRS 9 இன் தேவைகளுக்கு அமைவாக முதலீட்டின் மீதான பெறுமதி குறைப்பு நட்டத்தை அங்கீகரிக்கப்பட வேண்டும்.
(இ)	வருமானவரி தொடர்பிலான இலங்கை கணக்கீட்டுத் நியமம் (LKAS 12) இன் 88 ஆவது பந்தியின் வெளிப்படுத்தல் தேவைகளுக்கு முரணாக, மதிப்பீட்டு ஆண்டு 2018/2019 தொடர்பில் செலுத்தித் தீர்க்கப்படாத ரூபா 925.95 மில்லியன் தொகையான நிறுவன வருமானவரிச் சர்ச்சை தொடர்பில் நிதியம் வெளிப்படுத்தவில்லை. இத்தொகையானது மீளாய்வாண்டின் இறுதியில் வெளிப்படுத்தப்பட்ட நிலுவை வரி அறிக்கையின்படி செலுத்தித் தீர்க்கப்படாமல் நிலுவையில் காணப்படுகின்றது.	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் (IRD) நிதியத்தால் ஏற்கனவே செலுத்தித் தீர்க்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி (WHT) கொடுப்பனவுகளை RAMIS செயன்முறையில் இற்றைப்படுத்தத் தவறிய ஒரு மேற்பார்வைக் குறைபாட்டின் காரணமாகவே இவ்மதிப்பீடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் பாரிய வரி செலுத்துவோரினுடைய பிரிவு நிதி 2 இன் உதவி ஆணையாளருக்கு 2022 ஆகஸ்ட் 1 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் வாய்மொழியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மதிப்பீடு செய்யப்பட்ட வரி, வட்டி அல்லது தண்டப்பணங்களுக்கு நிதியம்	LKAS 12 இன் தேவைகளுக்கு அமைவாக, தீர்க்கப்படாத வரி சார்ந்த சிக்கல்களும் அவற்றின் சாத்தியமான நிதி சார் விளைவுகளும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

		பொறுப்பற்றதாகும். எனவே, LKAS 12 இன் 88 ஆவது பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்தல் தேவைப்படும் எந்தவொரு ஐயப்பாடான பொறுப்பும் இங்கு காணப்படவில்லை.	
(ஈ)	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2020/2021 மதிப்பீட்டு ஆண்டு தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட 2024 ஜூன் 13 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், 2011 மே 06 ஆம் திகதிய 1704/18 ஆம் இலக்க வர்த்தமானி மற்றும் 2021 ஜூன் 14 ஆம் திகதிய 2232/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவாக நிதியம் தேவையான அனுமதிகளைப் பெற்று அத்தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தாலன்றி, நிதியத்திற்கான செல்லுபடியாகும் வருமானவரி வீதமானது 14 சதவீத விசேட வரி வீதத்திற்குப் பதிலாக 24 சதவீதமாக காணப்படுதல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் இவ்விடயம் தீர்க்கப்படாமல் இருந்ததுடன், LKAS 12 - வருமானவரிகள் தொடர்பிலான கணக்கீட்டு நியமத்தின் 88 ஆவது பந்திக்கு முரணாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை.	2024 ஜூன் 13 ஆம் திகதிய குறித்த கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, இலங்கை மின்சார சபை சேமலாப நிதியத்தின் அதிகாரிகள் பாரிய வரி செலுத்துவோர் பிரிவு நிதி 2 இன் உதவி ஆணையாளருடனான கலந்தரையாடல் ஒன்றிற்கு 2024 ஜூன் 16 ஆம் திகதி அழைக்கப்பட்டனர். இதன்போது, இது தொடர்பில் இலங்கை மின்சார சபை சேமலாப நிதியத்தின் நிலைப்பாட்டை விளக்கி வாக்குமூலம் ஒன்று வழங்கப்பட்டதுடன், அதன்பின்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் எந்தவொரு தொடர்பாடலும் மேற்கொள்ளப்படவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட வர்த்தமானிகளில் விதிக்கப்பட்டுள்ள முதலீட்டு நிபந்தனைகளை இந்நிதியம் மீறவில்லை. எனவே, வருமானவரி பற்றிய இலங்கையின் கணக்கீட்டுத் நியமம் 12 இன் 88 ஆவது பிரிவின்படி நிதிக்கூற்றுகளில் எந்தவொரு வெளிப்படுத்தலும் தேவைப்படவில்லை.	நிதியமானது செல்லுபடியாகும் வரி வீதம் தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து முறையான தீர்மானம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், LKAS 12 இன் தேவைகளுக்கு அமைவாக இவ்விடயத்தை முறையாகக் கணக்குகளில் பதிவிட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பங்குலாபக் கொடுப்பனவு மற்றும் செயலற்ற உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி என்பன ரூபா 338.295 மில்லியன் தொகை, இலங்கை கணக்கீட்டு நியமம் 07 - காசுப்பாய்ச்சல் கூற்றின் 21 ஆவது பந்திக்கு முரணாக, காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் குறைத்து முன்வைக்கப்பட்டுள்ளது.	காசுப்பாய்ச்சல் கூற்றிலுள்ள இந்த வெளிப்படுத்தலானது அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுகளிலிருந்து சீராக்கப்பட்டு, முதலீட்டுச் நடவடிக்கைகளின் கீழ் வகைப்படுத்தப்படும்.	காசுப்பாய்ச்சல் விடயங்கள் உரிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வகைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட வேண்டும்.

(ஊ)	2025 திசெம்பர் 31 ஆந் திகதிய நிலவரப்படியான ரூபா 31.33 மில்லியன் கடன் மற்றும் அது தொடர்பான பெறவேண்டிய வட்டித் தொகையானது, இலங்கை கணக்கீட்டு நியமம் 01 - நிதிக்கூற்றுக்களை முன்வைத்தலின் 15 மற்றும் 29 ஆவது பந்திகளிற்கு முரணாக, பெறவேண்டிய பங்களிப்புகளின் கீழ் தவறாக வகைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	அடுத்த நிதியாண்டின் கணக்குகளில் பெறவேண்டிய பங்களிப்புகள் மற்றும் பெறவேண்டிய கடன்கள் என வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டு, இந்தக் குறிப்பு திருத்தப்படும்.	கடன் மற்றும் அது தொடர்பான பெறவேண்டிய வட்டித் தொகைகள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு, பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகளில் உரிய முறையில் வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் இறுதியில், பதவி விலக்கிய மற்றும் விலகிய உறுப்பினர்களின் கணக்கு மீதிகள் தீர்க்கப்படாததன் காரணமாக, 124 செயற்பாடற்ற உறுப்பினர்களிடமிருந்து பெறவேண்டிய கடன்களாக ரூபா 13.26 மில்லியன் தொகை 5 ஆண்டுகளுக்கு மேலாக பெறப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது. அத்தொகையில், 32 செயற்பாடற்ற உறுப்பினர்களுக்குரிய ரூபா 7.7 மில்லியன் தொகையும் 86 செயற்பாடற்ற உறுப்பினர்களுக்குரிய ரூபா 2.3 மில்லியன் தொகையும் முறையே 9 ஆண்டுகள், 33 ஆண்டுகளுக்கு மேலாகப் பெறப்படாமல் நிலுவையில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது.	கருத்திற்கொள்ளப் படுகின்றது	செயற்பாடற்ற உறுப்பினர்களிடமிருந்து பெறவேண்டியுள்ள கடன் மீதிகளை மேலும் தாமதமின்றி வசூலிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டியவைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில், உரிய உறுப்பினர்களின் கணக்கு மீதிகளை விடுவிப்பதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்காததன் காரணமாக, நீக்கப்பட்ட 597 உறுப்பினர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 92.87 மில்லியன் தொகை 5 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் காணப்படுகின்றது. அவற்றில், நீக்கப்பட்ட 303 உறுப்பினர்களுக்குரிய ரூபா 52.3 மில்லியன்	கருத்திற்கொள்ளப்ப டுகின்றது	தேவையான ஆவணங்களைப் பெற்று, நிலுவையிலுள்ள உறுப்பினர்களின் மீதித் தொகைகளை மேலும் தாமதமின்றித் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	தொகையும் நீக்கப்பட்ட 124 உறுப்பினர்களுக்குரிய ரூபா 1.91 மில்லியன் தொகையும் முறையே 9 ஆண்டுகள், 33 ஆண்டுகளுக்கு மேலாகச் செலுத்தப்படாமல் நிலுவையில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில், விலகிய 299 உறுப்பினர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 4.9 மில்லியன் தொகை 8 ஆண்டுகளுக்கு மேலாகச் செலுத்தப்படாமல் நிலுவையில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது.	கருத்திற்கொள்ளப்படுகின்றது	நிலுவையிலுள்ள உறுப்பினர்களின் மீதித் தொகைகளை மேலும் தாமதமின்றித் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.7. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள் தொடர்பான அனைத்து விடயங்களும் இத் தலைப்பின் கீழ் காண்பிக்கப்படும்.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	சேமலாப நிதியப் பிரமாணங்கள்			
(i)	விதி 11 (i) மற்றும் (ii)	ஒவ்வொரு உறுப்பினர் மற்றும் ஊழியரினதும் ஊழியருடைய சம்பளங்கள் அல்லது கூலிகளிலிருந்து முறையே 10 சதவீதம் மற்றும் 15 சதவீதம் நிதியத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். அதிகாரச் சட்டத்தின் 04 ஆம் விதியின் பிரகாரம், சம்பளங்கள் மற்றும் கூலிகள் சகல ஏனைய வேதனங்கள், கொடுப்பனவுகள், மற்றும் படிகள் போன்றன தவிர்த்து அடிப்படை சம்பளம் மற்றும் அடிப்படை கூலியை கருதுகின்றது. எவ்வாறாயினும், இந்த ஏற்பாட்டிற்கு முரணாக நிதியத்திற்கான பங்களிப்பின் கணிப்பீட்டில் CEB ஆனது அடிப்படை சம்பளத்திலிருந்து எக்ஸ்சோடி படிகள், பட்ட பின்படிப்பு படிகள்/ பகுதியளவு தொழில்சார் படிகள் என்பவற்றில் உயர்ந்த படிகளை கருத்திற்கொண்டிருந்தது.	ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பை கருத்திற் கொள்கையில் 2007 ஒக்தோபர் 23 ஆந் திகதிய DGM(P)/Policy/GS(1)/181 ஆம் இலக்க ஆளணிச் சுற்றறிக்கைக்கு அமைய உயர்ந்த படிகள்(எக்ஸ்சோடி படிகள், பட்ட பின்படிப்பு படிகள், தொழில்சார் படிகள். பகுதியளவு தொழில்சார் படிகள்) திரண்ட சம்பளத்திற்கு புறம்பாக கருத்திற் கொள்ளப்பட்டது.	சேமலாப நிதிக்கான பங்களிப்பு தொடர்பான கணிப்பீடு, பொருத்தமான சேமலாப நிதியப் பிரமானங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) விதி 22	இந்த ஏற்பாடுகளிற்கு முரணாக 2025 சனவரி 01 இலிருந்து நிறுத்தி வைத்த உழைப்புகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான பரிசோதனைக் கிரயம் மற்றும் வரி கழித்த பின்னரே ரூபா 11.65 பில்லியன் தேறிய இலாபம் உறுப்பினர்களிற்கிடையில் முழுமையாக பங்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஒதுக்கீடுகள், ஏற்பாடுகள் மற்றும் நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய செலவுகள் ஆகியவற்றை உருவாக்கிய பின்னர் கிடைக்கும் நிதியத்தின் தேறிய வருமானம், உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. சேமலாப நிதிய விதிகளின் 20(i) ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து நிர்வாகச் செலவுகளும் பொறுப்பாளர் கணக்கில் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.	நிதியத்தின் தேறிய வருமானப் பகிர்வானது, சேமலாப நிதியப் பிரமாணங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(iii) விதி 31	காலத்திற்கு காலம் சபையின் தீர்மானங்களால் இலங்கை மின்சார சபைக்காக சட்ட ரீதியாக விதிகளிற்கான திருத்தங்கள் செய்யப்பட வேண்டியதுடன் திருத்தம், வேறுபாடு, மாற்றத்திற்கு உட்படுதல், மீள் செய்கை அல்லது அவற்றில் ஏதாவது என்பதற்கான காலத்தில் தொழில் ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் என்பவற்றின் அனுமதிக்கு உட்படுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், சபையின் அனுமதி இல்லாமல் தொழில் ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் முகாமைத்தவ குழுவின் அதிகாரம் மற்றும் கடமைகள் தொடர்பில் விதிகள் வர்த்தமாண அறிவித்தல் ஊடாக சேமலாப நிதிய பிரமாணங்கள் 2003 இற்கு திருத்தங்களை வெளியிட்டிருக்கவில்லை. நிதியத்தால் முதலீட்டு அதிகாரங்கள் திருத்தப்பட்டிருந்ததுடன் இதன்படி அவற்றினை செயற்படுத்தப்பட்டது. மேலும், ரூபா 54 மில்லியன் மொத்தமான 54 கல்விக் கடன்கள், ரூபா 8,284.5	2003 திசெம்பர் 31 ஆந் திகதிய 1321/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தலின் 15(i) ஆம் பிரிவிற்கமைய நிதியத்தின் முகாமைத்தவ குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் அந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	சேமலாப நிதிய விதிமுறைகளுக்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதையும், அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாகவே கடன்கள் வழங்கப்படுவதையும் நிதியம் உறுதிப்படுத்த வேண்டும்.

		மில்லியன் மொத்தமான 5,667 ஆதனக் கடன்கள் என்பன விதிகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. மேலும், விதிமுறைகளுக்கு முரணாக, முந்தைய நிதியாண்டின் முடிவிலிருந்த மீதித் தொகைக்கு பதிலாக, விண்ணப்பிக்கும் நேரத்தில் உறுப்பினரின் கணக்கிலிருந்த மீதித் தொகையின் அடிப்படையிலேயே கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. அத்துடன், கடன்கள் மொத்த வருமானத்தில் 55 சதவீதத்திற்கு மிகையாதவாறு இருத்தல் வேண்டும் என்ற விதிகள் கோரியிருந்த போதிலும், திருத்தப்பட்ட நடைமுறையானது மொத்த வருமானத்தில் 85 சதவீதம் வரை கடன்களை அனுமதிக்கின்றது.		
(ஆ)	2022 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய PED 05/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.7 ஆம் பிரிவு	சம்பளமற்ற விடுமுறை காலத்தில் மீள் செலுத்தும் திட்டம் தொடர்பில் ஊழியர்களுடன் சட்டப்பூர்வமாகப் பிணைக்கப்பட்ட எவ்வித ஒப்பந்தங்களும் நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மாறாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்ட உறுப்பினர்களால் மட்டுமே மாதாந்தக் கடன் தவணைகளைத் தீர்ப்பதற்கான நிலையான கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.	சம்பளமற்ற விடுமுறையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும், தங்களுடைய சம்பளமற்ற விடுமுறைக் காலத்தில் மாதாந்தக் கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதற்காக நிலையான கட்டளையொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். இது ஒரு கட்டாயக் கடப்பாடாக இருந்தபோதிலும், சில உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டபடி தங்களது மீளாய்வுத் தொகைகளை அனுப்புவதில்லை. இவர்கள் இலங்கை மின்சார சபையில் மீண்டும் பணியில் இணையும்போது, இந்நிலுவைத் தொகைகள் கூடுதல் கட்டணத்துடன் வசூலிக்கப்படும். இத்தொகைகள்	சம்பளமற்ற விடுமுறையில் செல்லும் அனைத்து உறுப்பினர்களுடனும் சட்டப்பூர்வமாகப் பிணைக்கப்பட்ட திருப்பிச் செலுத்தும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதையும், நிலுவையிலுள்ள கடன் தவணைகள் பொருந்தக்கூடிய விதிமுறைகளுக்கு அமைவாக உடனுக்குடன் வசூலிக்கப்படுவதையும் நிதியம் உறுதிப்படுத்த வேண்டும்.

			வசூலிக்கப்படாமை குறித்து சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் உரிய சம்பளப் பிரிவுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.	
(இ)	2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 25A ஆம் பிரிவு	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு அமைவாக, நிதிச் சேவைகளை வழங்கல் மீதான பெறுமதி சேர் வரிக்காக 2022 பெப்ரவரி 15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ நிதியம் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்ததுடன், தவறும்பட்சத்தில் பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 25A ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகக் கட்டாயப் பதிவு மேற்கொள்ளப்படும் என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், நிதியம் அதற்கேற்ப செயற்பட்டிருக்கவில்லை.	இது குறித்து, நிதி மற்றும் உதவி நிதி முகாமை AFM (TM) அவர்களின் 21.02.2022 திகதியிட்ட FM/AFM™/DFM(Tax)/ Provident Fund இலக்கக் கடிதம் மூலம் சிரேஷ்ட பிரதி ஆணையாளருக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன், துணை நிதி முகாமையாளர் DFM (PF) அவர்களின் 26.04.2022 திகதியிட்ட கடிதம் மூலம் நிதி அமைச்சின் திறைசேரிச் செயலாளருக்கும் இப்பிரச்சினை குறித்துக் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.	சேமலாப நிதியமானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு, அதன் பெறமதி சேர் வரி பதிவுத் தேவை குறித்த முறையான தீர்மானத்தைப் பெற வேண்டும் என்பதுடன், அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சேமலாப நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,236.12 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நேரொத்த இலாபம் ரூபா 13,163.86 மில்லியனாகும் ஆகவே, நிதிசார் விளைவுகளின் ரூபா 72.26 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ரூபா 68.60 மில்லியனால் வட்டி வருமானங்களின் அதிகரிப்பே இவ் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

2.2 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான நிதியத்தின் சில முக்கியமான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

விகிதம்	2025 %	2024 %
தேறிய இலாப வீதம் (PAT)	88.12	90.24
சராசரி முதலீடு மீதான வருமான வீதம்	17.11	18.2

உறுப்பினர் மீதிகள் மீதான வருமான வீதம்	10.10	11.48
முடிவுறுத்தில் உறுப்பினர் மீதான பங்குலாப வெளிப்படுத்தல் வீதம்	10.94	12.71

2025 ஆம் ஆண்டில், 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அனைத்து பிரதான செயற்திறன் விகிதங்களும் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய இலாப விகிதம் 2.12 சதவீதத்தாலும், சராசரி முதலீட்டின் மீதான வருமான வீதம் 1.09 சதவீதத்தாலும், உறுப்பினர் மீதி மீதான வருமான் வீதம் 1.38 சதவீதத்தாலும், பங்குலாப வெளிப்படுத்தல் வீதம் 1.77 சதவீதத்தாலும் குறைவடைந்துள்ளன. இவ்விகிதங்களின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக வருமான வரிச் செலவு 25 சதவீதம் அதிகரித்தமையும், மீளாய்வாண்டில் முதலீட்டு இலாபப்பங்கு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் வட்டி வருமானத்தில் ஒப்பீட்டளவில் குறைந்த வளர்ச்சி காணப்பட்டமையுமே காரணமாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரைகள்
2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் என்ரஸ் செக்குரீட்டீஸ் பில்சீ இன் (ESP) ஊடாக மூன்று திறைசேரி முறிகளில் ரூபா 2.3 பில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீடுகள் தொடர்பான முறிகள் இலங்கை மத்திய வங்கி வைப்பு முறைமையில் நிதியத்தின் பெயரில் இருக்கவில்லை என்பது 2015 ஆம் ஆண்டில் வெளிப்பட்டது. எவ்வாறாயினும், அந்நேரத்தில் அவர்களுடைய தவறிற்காக நிதியத்தில் சேவையாற்றிய பொறுப்பான உத்தியோத்தரை அடையாளம் காண்பதற்கு அந்நேரத்தில் முறையான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்காததுடன் அவர்கள் இலங்கை மின்சார சபையிடமிருந்து ஓய்வுபெற்றுச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதன்படி, இலங்கை மின்சார சபை 2015 திசெம்பர் 09 இல் ESP இற்கு எதிராக நிதி குற்றப் புலனாய்வு பிரிவிற்கு (FCID) முறைப்பாடு பதிவு செய்திருந்ததுடன் FCID ஆனது ESP இற்கு எதிராக வழக்கு தொடர்ந்திருந்தது. மேலும், இலங்கை மின்சார சபை முகப்பெறுமதி மற்றும் தவறவிட்ட கூப்பன் வட்டியை அறவிடுவதற்கு ESP இற்கு எதிராக 2018 இல் சிவில் வழக்கு தொடர்ந்திருந்தது. 2018 மற்றும் 2019	இலங்கை மின்சார சபை ஊழியர் சேமலாப நிதியமானது, பல முன்னணி வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் சில நலன்புரி நிதியங்களுக்கு எதிராக இந்த பிணைமுறி மோசடியை மேற்கொண்ட என்ட்ரஸ்ட் செக்யூரிட்டீஸ் பிஎல்சி நிறுவனத்திற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR/1405/2018 எனும் வழக்கு எண்ணின் கீழ் சிவில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. இதன் அடுத்த விசாரணைத் தவணை 2025 ஜூலை 08 ஆம் திகதிக்கு குறிக்கப்பட்டுள்ளது. மேலும், கொழும்பு மேல் நீதிமன்றம் என்ட்ரஸ்ட் செக்யூரிட்டீஸ் பிஎல்சி நிறுவனத்தைக் கலைக்க உத்தரவிட்டுள்ளதுடன், அதற்காக SJMS அசோசியேட்ஸ் நிறுவனம் கலைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளது. இந்த கலைப்புச் செயற்பாட்டில் பங்கேற்பதற்காக இலங்கை மின்சார சபை 2025 மார்ச் 10 ஆம் திகதி ஒரு	நிலுவையிலுள்ள முதலீடு மற்றும் அதனுடன் தொடர்புடைய வட்டியை மீளப் பெறுவதற்கு சாத்தியமான அனைத்து சட்டப்பூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அதிகாரிகளின் அலட்சியத்திற்காக அவர்கள் மீது உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். மேலும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக முதலீடுகள் மீதான பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

ஆம் ஆண்டுகளில் முதிர்வடைந்த முதலீடுகளின் முகப்பெறுமதி மற்றும் தவறவிட்ட கூப்பன் வட்டி ரூபா 2.8 பில்லயனாக இருந்ததுடன் இரண்டு வழக்குகளும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

சத்தியக் கடதாசியைச் சமர்ப்பித்துள்ளது. அத்துடன், மேற்படி மோசடி குறித்து விசாரணை நடத்துவதற்காக இலங்கை மின்சார சபையினால் நீதிபதிகளைக் கொண்ட சுயாதீனக் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அக்குழுவின் இறுதி அறிக்கை 2026.05.11 அன்று வரையறுக்கப்பட்ட CEBEF (தனியார்) நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அக்குழுவின் பரிந்துரைகளின்படி உடனடியாக அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.